MADURAI DISTRICT முதல் திருப்புதல் பொதுத் தேர்வு - 2018

**M**

பன்னிரெண்டாம் வகுப்பு

பதிவு எண் :

நேரம்: 3.00 மணி

வணிகவியல்

மதிப்பெண்கள்: 200

பகுதி - அ

அனைத்து வினாக்களுக்கும் விடையளி: 40 x 1 = 40

I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:

1. ஒரு குடும்பத்தில் பிறப்பின் மூலம் உறுப்புமை ஏற்படுத்துவது
   a) தனி வணிகம் b) இந்து கூட்டுக் குடும்பம்
   c) கூட்டுறவு சங்கம் d) கூட்டாண்மை
2. பதிவு கட்டாயமாக்கப்பட்டுள்ள அமைப்பு
   a) தனி வணிகர் b) கூட்டாண்மை
   c) கூட்டு பங்கு நிறுமம் d) இந்து கூட்டுக் குடும்ப வணிகம்
3. தனியாள் வணிகரின் பொறுப்பு
   a) முதலுக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது
   b) சொத்துக்கு ஏற்ப வரையறுக்கப்பட்டது
   c) வரையறை இல்லாதது
4. தனி நபர் கட்டுப்பாடு உலகிலேயே சிறந்தது எனக்கூறியவர்
   a) O.R.கிருஷ்ணசாமி b) P.K.கோஷ்
   c) Y.K.பூசன் d) வில்லியம் R.பேசட்
5. கூட்டாண்மையின் அடிப்படைக்கூறு
   a) பூரண நல்ல நம்பிக்கை
   b) முதலீட்டிற்கான தொகை இருத்தல்
   c) கூடி தொழில் செய்ய விருப்பம்
6. கூட்டாண்மையில் உள்ள அனைவரையும் ஒட்டுமொத்தமாக _______ என அழைக்கிறோம்.
   a) நிறுமம் b) குடும்பம் c) கூட்டுறவு d) நிறுவனம்
7. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
   a) ஒப்பந்தத்தால் b) கூட்டாளிகளிடையே உறவு c) அரசின் வழிகாட்டல்
8. பொது வரையறை நிறுமத்தில் குறைந்த அளவு உறுப்பினர்களின் எண்ணிக்கை
   a) 2 b) 3 c) 7 d) 10
9. தனி வரையறை நிறுமம் ஒன்று தொழிலை தொடங்குவது
   a) தொழில் கூட்டுருவாக்கச் சான்றிதழ் பெற்றவுடன்
   b) தொழில் தொடக்கச் சான்றிதழ் பெற்றவுடன்
   c) பதிவாளரிடமிருந்து தான் தேர்ந்தெடுத்துள்ள, நிறுமப் பெயருக்கு ஒப்புதல் கிடைத்தவுடன்
   d) பதிவாளரிடம் நிறும் அமைப்பிற்குரிய அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்த பின்னர் தொழில் தொடங்கலாம்
10. நிறுமங்கள் சட்டத்தில் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணை A என்பது
    a) நிகழ்ச்சிக் குறிப்பேட்டின் மாதிரி b) இருப்புநிலைக்குறிப்பின் மாதிரி
    c) நிறுமச் செயல்முறை விதிகளின் மாதிரி d) நிறும அமைப்பு முறையேட்டின் மாதிரி
11. நிர்வாகத்தின் மிகு அதிகாரங்களைப் பெற்றிருக்கும் நபர்
    a) மேலாண்மை இயக்குநர் b) பொது மேலாளர்
    c) மேலாளர் d) நிறுமச் செயலாளர்
12. இரு பொது ஆண்டுக் கூட்டங்களுக்கு உள்ள இடைவெளி
    a) 15 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது b) 12 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது
    c) 18 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது d) 20 மாதங்களுக்கு மேல் செல்லக்கூடாது

13. ஒரு இயக்குநர் _______ ஆக செயல்படுகிறார்.
 a) நிறுமத்தின் முகவராக
 b) நிறுமத்தின் பொறுப்பாண்மையர் (அ) நம்புறுதியாண்மையராக
 c) நிறுமத்தின் முதன்மை நிர்வாக அதிகாரியாக
 d) இவை அனைத்தும்
14. புதிய பங்குகளை விற்க வழக்கமாகப் பயன்படுத்தும் முறை
 a) பொது விடுப்புகள் b) விற்பனைக்கான தருமொழி
 c) மேலாண்மை தரகர்கள் d) ஒப்புறுதியளித்தல்
15. இந்தியாவிலுள்ள ஏற்பிசைவு பெற்ற பங்கு மாற்றகங்களின் எண்ணிக்கை
 a) 20 b) 21 c) 22 d) 24
16. எல்லாம் நன்மையாகவே நடைபெறும் என்ற மனப்பாங்கு கொண்டவர்
 a) காளை b) கரடி c) கலைமான் d) முடவாத்து
17. முதன் முதலில் நுகர்வோர் கூட்டுறவு வெற்றிகரமாக விளங்கிய நாடு
 a) இங்கிலாந்து b) அமெரிக்கா c) சுவிஸ் d) இந்தியா
18. ஒரு கூட்டுறவு சிறப்பங்காடி அளிப்பது
 a) கடன் b) சேவை c) சரக்குகள் d) ரொக்கம்
19. பொதுமக்களும் இந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கலாம்.
 a) அரசு நிறுமம் b) பொதுக்கழகம்
 c) துறைவாரி அமைப்பு d) மேற்கூறிய ஏதுமில்லை
20. அரசு நிறுமத்தில் அரசு கொண்டிருக்க வேண்டிய குறைந்தபட்ச பங்கு முதல்
 a) 51% b) 60% c) 75% d) 90%

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

21. தொழில் அமைப்புகளில் மிகவும் பழமையானது _______.
22. குறைந்த மூலதனமே தேவைப்படும் அடுமனைகள் (Bakeries) போன்ற தொழில்கள் _______ க்கு ஏற்ற தொழில்களாகும்.
23. இந்திய கூட்டாண்மைச் சட்டம் ஆண்டு _______.
24. கூட்டாளிகளுக்கு ஒரு உடன்பாட்டின்படி உரிமை வழங்கப்பட்டிருப்பின் அது _______ எனப்படும்.
25. _______ என்பது தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட கூட்டாண்மை ஆகும்.
26. _______ என்பது அனைத்து கூட்டாளிகளுக்கிடையே நிலவும் உறவை முறித்துக் கொள்வதாகும்.
27. பங்குநர்கள் நிறுமத்தின் உண்மையான _______.
28. ஒரு நிறுமத்தின் கடனீட்டுப் பத்திரதாரர்கள் என்பார் அதன் _______ ஆவார்.
29. தனக்கென்று தனியானதொரு செயல்முறை விதிகளை வகுத்துக் கொள்ள தேவையில்லாத நிறுமம் _______ ஆகும்.
30. ஒரு நிறுமத்தின் அகமேலாண்மை குறித்த விவரங்கள் அடங்கியிருப்பது _______.
31. _______ ஐ செலுத்தத் தவறுவதால், பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்படுகின்றன.
32. நிறுமச் செயலர் _______ நியமிக்கப்பெறுகிறார்.
33. ஒரு பொது வரையறு நிறுமப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய உறுப்பினர்களின் குறைவெண் _______ ஆகும்.
34. போல்ட் என்பது _______ பங்கு சந்தையில் உபயோகத்தில் உள்ள ஒரு நேரடி வணிக முறையாகும்.
35. _______ இந்தியப் பங்கு சந்தையை ஒழுங்குபடுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட மேற்பார்வை அமைப்பாகும்.
36. பங்கு மாற்றகத்தின் அலுவல் பட்டியலில் பங்குகளின் பெயரை இடம்பெறச் செய்வது _______ எனப்படும்.
37. உறுப்பினர் சேவை என்பது இதன் முக்கிய குறிக்கோள் _______.
38. கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களின் பொறுப்பு _______.

39. அரசுத் தொழில் வடிவமைப்புகளில் மிகவும் தொன்மையானது ________.
40. பொதுக் கழகத்தை அரசால் நியமிக்கப்பட்ட ________ நிர்வாகம் செய்கின்றது.

பகுதி - ஆ

**III. எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளி:** 10 x 4 = 40

41. கர்த்தா என்பவர் யார்?
42. பன்னாட்டு நிறுமத்திற்கு ஏதேனும் 4 எடுத்துக்காட்டுகளைத் தருக.
43. கூட்டுருவாக்கம் பெறாத அமைப்புகளின் வகைகளைக் கூறுக.
44. வரையறுக்கப்பட்ட கூட்டாண்மை என்றால் என்ன?
45. கூட்டாளிகளின் வகைகளில் ஏதேனும் நான்கினைக் கூறுக.
46. பங்கு முனைமம் என்றால் என்ன?
47. வரையறுப் பொறுப்பு என்றால் என்ன?
48. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை?
49. கூட்டத்தில் குறைவெண் என்றால் என்ன?
50. பத்திரம் என்றால் என்ன?
51. பரஸ்பர நிதியின் வரைவிலக்கணம் கூறுக.
52. இராக்டேல் முன்னோடிகள் என்பவர் யார்?
53. ஆதரவுப் பங்காதாயம் என்றால் என்ன?
54. நாட்டுடைமையாக்கம் என்றால் என்ன?
55. அரசு தொழில் என்பதன் வரைவிலக்கணத்தைக் கூறுக.

பகுதி - இ

**IV. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளி:** 5 x 8 = 40

56. இந்து கூட்டுக்குடும்ப வணிகம் பற்றி குறிப்பு வரைக.
57. கூட்டாண்மை நிறுவனத்தை பதிவு செய்யாமையின் குறைபாடுகள் யாவை?
58. தனி வரையறு நிறுமத்திற்கும், பொது வரையறு நிறுமத்திற்கும் இடையே உள்ள ஏதேனும் எட்டு வேறுபாடுகளை எழுதுக.
59. பங்குகளை வட்டத்தில் வெளியிட உள்ள நிபந்தனைகளை விளக்குக.
60. ஒரு பொது வரையறு நிறுமத்தில் இயக்குநர் எவ்வாறு நியமிக்கப்படுகின்றனர்?
61. ஊக வணிகர்களின் வகைகளை விளக்குக.
62. கூட்டுறவு சிறப்பங்காடியின் பொருள் தந்து அதன் சிறப்பியல்புகளைத் தருக.
63. பொதுத்துறைக்கும், தனியார் துறைக்குமுள்ள வேறுபாடுகள் ஏதேனும் எட்டினை எழுதுக.

பகுதி - ஈ

**V. அனைத்து வினாக்களுக்கும் விடையளி:** 4 x 20 = 80

64. a) அமைப்பின் கோட்பாடுகள் எவையேனும் பத்து பற்றி விவரி.

(அல்லது)

b) பொதுக் கழகத்தின் இயல்புகள் 10, நிறைகள் 5, குறைகள் 5 - விளக்குக.

65. a) தனி நபர் வணிகத்தின் நன்மைகளை விவரி.

(அல்லது)

b) செபியின் நோக்கம், இயல்புகள், பணிகள், அதிகாரம் ஆகியவற்றை விளக்குக.

66. a) கூட்டாண்மை நிறுவனம் கலைக்கப்படும் சூழ்நிலைகளை விளக்குக.

(அல்லது)

b) ஒரு நிறுமச் செயலரின் பணிகளும், கடமைகளும் யாது?

67. a) கூட்டு பங்கு நிறுமத்திற்கும், கூட்டாண்மைக்கும் உள்ள வேறுபாடுகளில் எவையேனும் பத்தினை விளக்குக.

(அல்லது)

b) கூட்டுறவுச் சங்கத்தின் நன்மைகளில் ஏதேனும் பத்தினை விவரி.

******